## எண்களை எண்மானத்தில் (எழுத்தில்) எழுதுவோம் வாரீர்.

முந்தைய பாடத்தில் நாம் இட மதிப்பு மற்றும் இலக்க மதிப்பு தொடர்பாக படித்தோம்.

இன்றைய பாடத்தில் நாம் எண்களை எப்படி வாசிப்பது என்பது தொடர்பாக பார்க்கவிருக்கின்றோம்.

**கீழே உள்ள எண்கள் எழுதப்பட்டுள்ள முறையைக் கவனி:**

671 = அறுநூற்று எழுபத்து ஒன்று

4 523 = நான்காயிரத்து ஐந்நூற்று இருபத்து மூன்று

56 865 = ஐம்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஐந்து

327 402 = முந்நூற்று இருபத்து ஏழாயிரத்து நானூற்று இரண்டு

619 394 = அறுநூற்று பத்தொண்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு.

**பயிற்சி**

சரியான விடையை இழுத்து வைக்கவும் (Drag ang drop).

பின்னர் இதை உங்கள் பயிற்சி புத்தகத்தில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 84 251 | 10 293 | 247 008 | 27 611 |
| 89 309 | 30 846 | 45 013 | 179 108 |

| | | |
|---|---|---|
| 1 | பத்தாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று | |
| 2 | இருபத்து ஏழாயிரத்து அறுநூற்று பதினொன்று | |
| 3 | நூற்று எழுபத்து ஒன்பதாயிரத்து நூற்று எட்டு | |
| 4 | முப்பதாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஆறு | |
| 5 | எண்பத்து நான்காயிரத்து இருநூற்று ஐம்பத்து ஒன்று | |
| 6 | இருநூற்று நாற்பத்து ஏழாயிரத்து எட்டு | |
| 7 | எண்பத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று ஒன்பது | |
| 8 | நாற்பத்து ஐந்தாயிரத்து பதின்மூன்று | |